வேண்டுமென்று அரசால் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள். அவ்வப்போது ஏற்படுகிற சூழ்நிலைக்கேற்ப நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள். அவ்வப்போது ஏற்படும் சூழ்நிலையை அவையில் எடுத்து வைப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. பொது விவாதம், மானியக் கோரிக்கை வரும்போது இன்னும் தெளிவு படுத்த வாய்ப்பிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் மட்டுமல்ல, பல்வேறு தொகுதிகளைச் சார்ந்த உறுப்பினர்களும் அவர் களுடைய எண்ணங்களை தெரிவித்து வருகிறார்கள். அவர்கள் எண்ணத்திற்கு உரிய மதிப்பு அளித்து, இவைகளைக் கருத்தில் கொண்டு, அரசு நடவடிக்கை எடுத்துவருகிறது. என்பதை இந்த வாய்ப்பினில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று 8—3—1984 காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 6-58 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

110. அம்பத்தூர் கிராமத்தின், சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான பெருந்திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டு வசதி—நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 23—10—1982 ஆம் நாளிட்ட 975 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.[தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

111. பெரம்பூர் கிராமத்தின், சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான பெருந்திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 7—7—1983 ஆம் நாளிட்ட 1030 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]

112. சின்ன சேக்காடு கிராமத்தின் சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான பெருந்திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டு வசதி—நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 23—7—1983 ஆம் நாளிட்ட 1145 ஆம் எண் அரசாணையில் வெளிடப்பட்ட

1984 மார்ச் 7]

அறிவிக்கை. [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர—நாட்டுப்புற திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972 123[2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

113. 1981-82 ஆம் ஆண்டு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கணக்குகளின் தணிக்கை அறிக்கை. (ஆங்கிலம்) [தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு மாநில வீட்டுவசதி வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 17/1961) 125 (2) (ஏ) பிரிவின் கீழ் பேரவை 1முன் வைக்கப் பெற்றது.]

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

எதுவுமில்லை.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS